***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - CC//184 /2021

: Prosecution P.W - 6

NAME : **திருவளர்செல்வன்**

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 08.07.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவேட்டநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி திருமலை வேலுசாமி என்பவரை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 24.05.2020 ம் தேதி இரவு 7.30 மணியளவில் ஐயனார்கோவில் பின்புறம் புளியந்தோப்பு கோவிலுக்கு பின்னால் சொக்கம்பட்டி போலிஸார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து கொண்டார்கள். உடைந்து போன பாட்டில்களை போலிஸார் எடுத்து பார்த்து கொண்டிருந்தார்கள். அதற்காக சாட்சியாகிய நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் திருமலை வேலுச்சாமியும் கையொப்பம் செய்தார். மேற்படி பார்வை மகஜர் அசா.ஆ.2 அத்தாட்சி அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் உடைந்த நிலையில் உள்ள பாட்டில் மற்றும் அதன் உடைந்த துண்டுகள் அசாபொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது வீட்டிற்கும், சம்பவம் நடந்த இடத்திற்கும் இடையே ஒரு மயில் தூரம் இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு யார் கூப்பிட்டு என்ன காரணத்திற்கான போனேன் என்றால் நான் எனது சுய வேலைக்காக சென்றேன். வழக்கில் காயம்பட்ட அசா.1 எனது உறவினர் என்றால் இல்லை. ஊர்க்காரர். எனக்கு சொக்கம்பட்டி காவல் நிலையத்திற்கு அடிக்கடி போய் பழக்கம் உண்டு என்றால் இல்லை. ஊர் பிரச்சினைகளில் முன்னின்று சொக்கம்பட்டி காவல்நிலையத்திற்கு

நான் அடிக்கடி செல்லும் பழக்கம் உண்டு என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு எத்தனை போலிஸார் வந்தார் என்றால் 3 போலிஸார் வந்தார்கள். அங்கு வந்த போலிஸார் எந்த பதவியில் உள்ளவர் என்றால் ஒரு போலிஸ் சீருடை இல்லாமலும் இரண்டு போலிஸ் சீருடையிலும் வந்தார்கள். அதில் ஒருவர் காவல் உதவி ஆய்வாளர். போலிஸார் கையில் லேப்டாப் எதுவும்வைத்திருந்தாரா என்றால் தெரியவில்லை. சம்பவ இடத்தில் எவ்வுளவு நேரம் இருந்திருப்பேன் என்றால் சுமார் 5 நிமிடங்கள் இருந்திருப்பேன். திருமலை வேலுச்சாமி என்ன காரணத்திற்காக வந்தார் என்றால் சம்பவ இடத்திற்கு 100 மீ தூரத்தில் திருமலைவேலுச்சாமிக்கு ஒரு கிணறு இருந்தது. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் எழுத்து கூட்டி வாசிப்பேன். போலிஸார் கையெழுத்து வாங்கிய பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் போலிஸார் படித்து காண்பித்தார்கள். அந்த 5 நிமிடத்திலேயே போலிஸார் விசாரித்து கையெழுத்து போட்டு கிளம்பி விட்டேன் என்றால் சரிதான்.

சம்பவ இடத்தில் மண்ணில் உடைந்த பாட்டில் துண்டுகளில் ரத்தம் எதுவும் படிந்திருந்ததா என்றால் தெரியாது. நான் சொன்னது போன்று சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும் காவல்நிலையத்தில் வைத்து பார்வை மகஜர், அத்தாட்சி மாதிரி வரைபடம் ஆகியவற்றில் கையொப்பம் செய்து விட்டு போலிஸார் கேட்டு கொண்டதற்கு இணங்கவும் அசா.1 எனது ஊரை சார்ந்தவர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//184 /2021 |
| | : | Prosecution P.W - 5 |
| NAME | : | முத்துசாமி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 08.07.2025

முதல் விசாரணை

நான் தற்போது திருவேட்டநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள். அசா.1 ராஜதுரை, அசா.2 அரசப்பன், அசா,3 வெங்கடேஷ், அசா.4 வைரமுத்து ஆகியோரை தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிஸார் விசாரணையின் போது கடந்த 24.05.2020 ம் தேதியன்று 15.30 மணிக்கு அசா.1 ராஜதுரை என்பவர் அவரது டிராக்டரை ஓட்டிக்கொண்டு கண்ணன் என்பவரது புளியந்தோப்பு வழியாக வந்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் மது அருந்தி கொண்டிருந்தவர்களை பார்த்து அசா.1 பாதையை விட்டு விலகி இருங்கள் என்று கூறியபோது ஆஜர் எதிரிகள் அசா.1 ஐ பார்த்து அசிங்கமாக பேசியும், கீழே கிடந்த பிராந்தி பாட்டிலை எடுத்து அசா.1 ன் இடது விலா பகுதி, இடது

கை, இடது முழங்கை மற்றும் இடது தொடையில் குத்தி காயம் ஏற்படுத்தினார்கள் என்றும் பின்பு வெட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்றுகொலைமிரட்டல் விடுத்து சென்றார்கள் என்றும் அதை நான் நேரில் பார்த்தேன் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi